**தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்பினை செயல்படுத்துவது குறித்து 07.06.2021 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பு**

தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கான சட்டம் தொடர்பாக திரு. சக்திராவ் என்பவர் (நீதிப்பேராணை மனு எண்.8025 / 2020) சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில், 22.03.2021 நாளன்று வழங்கப்பட்ட தீர்ப்பினை செயல்படுத்துவது குறித்து தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் 07.06.2021 அன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பங்கேற்றவர்கள் :

அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை

அரசு முதன்மைச் செயலாளர், உயர்க் கல்வித் துறை

அரசு செயலாளர், மனிதவள மேலாண்மைத் துறை

அரசு செயலாளர், பொதுத் துறை

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன : -

(i) சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் 22.03.2021 நாளிட்ட தீர்ப்பினை முழுமையாக செயல்படுத்துவது.

(ii) 1-ஆம் வகுப்பு முதல், குறிப்பிட்ட பதவிக்கென வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரை (10 / 12-ஆம் வகுப்புகள், பட்டயம், இளங்கலை / முதுகலைப் பட்டங்கள்) தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களுக்கு மட்டுமே PSTM சட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதுகுறித்து தெளிவான அறிவுரைகள் அரசாணையாக வெளியிடலாம்.

**(நடவடிக்கை : மனிதவள மேலாண்மைத் துறை)**

(iii) பணிநியமனத்தின் ஒவ்வொரு நிலையிலும் (முதல்நிலை, முதன்மைத் தேர்வு மற்றும் இதர நிலை) PSTM சட்டத்தின் கீழ் 20 சதவீதம் முன்னுரிமை பின்பற்றப்பட வேண்டும். இத்தகைய நடைமுறை பதவி வாரியாக பின்பற்றப்பட வேண்டும்.

**(நடவடிக்கை : பள்ளிக் கல்வி, உயர்க் கல்வி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறைகள்)**

(த.பி.பா.)